## சுருக்கம்

நில எடுப்பு – சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், நுங்கம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.24, புல எண்கள்.240/16, 240/17 மற்றும் 240/18 – 638 சதுர அடியில் வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல் – ரூ.42,70,792/– செலவில் தனியார் நிலங்களை கையகப்படுத்துதல் – தமிழ்நாடு நில எடுப்பு சட்டம், 1894 பிரிவு 17 (2) ன் கீழ் நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.157 நாள்: 10.08.2010

**ஆடி – 25,**
**திருவள்ளுவர் ஆண்டு – 2041**

படிக்க:

முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண்.எம்2/19938/2009, நாள் 20.10.2009

* * * * *

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட சென்னை முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடிதத்தில் சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், நுங்கம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.24, புல எண்கள்.240/16, 240/17 மற்றும் 240/18 ல் 638 சதுர அடியில் வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையை அகலப்படுத்துவதற்காக தனியார் நிலங்களை கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்க கோரி சென்னை மாவட்ட ஆட்சியர் செயற்குறிப்பு அனுப்பி உள்ளார் எனவும், இந்நேர்வில் தனியார் நிலங்களை நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் கையகப்படுத்தி சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்குமாறும் நில எடுப்பு காரணமாக ஏற்படும் இழப்பிற்காக நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டு தொகை முழுமையும் சென்னை மாநகராட்சி ஏற்றுக்கொண்டு நிதி நிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்ததன் பேரில்

கையகப்படுத்தப்படவுள்ள இடம் 09.07.2009 அன்று கூட்டு புலத்தணிக்கை செய்யப்பட்டது என்றும், மேலும் மேற்படி நிலம் கீழ்கண்டுள்ளவாறு வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்:

| வ. எண். | புல எண். | மொத்த பரப்பு மனை (கிரவுண்டு) | நில எடுப்பு செய்யப்படவுள்ள பரப்பு (சதுர அடி) | வகைபாடு |
|---|---|---|---|---|
| 1. | 240/16 | 0.2110 | 116 சதுர அடி | ரயத்துவாரிமனை |
| 2. | 240/17 | 0.156 | 156 சதுர அடி | ரயத்துவாரிமனை |
| 3. | 240/18 | 2.306 | 366 சதுர அடி | ரயத்துவாரிமனை |
| | | மொத்தம் | 638 சதுர அடி | |

இந்நில எடுப்புக்குட்பட்ட மூன்று புலங்களிலும் உள்ள நிலத்தில் விலையுயர்ந்த மரங்கள், புரதான சின்னங்கள் ஏதுமில்லை எனவும், மூன்று புலங்களிலும் மதில் சுவர் மட்டுமே அமைந்துள்ளது என்றும் மேலும் இந்நிலத்திற்கான இழப்பீட்டு உத்தேச மதிப்பு ரூ.42,70,792/– என கீழ்கண்டுள்ளாவறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்:

| | | |
|---|---|---|
| (i) | நில மதிப்பு (ஒரு சதுர அடி ரூ.4700/– வீதம் 638 சதுர அடிக்கு) | ரூ.29,98,600/– |
| (ii) | சுற்றுசுவர் மதிப்பு (தோராயமாக) | ரூ.9,000/– |
| | | ரூ.30,07,600/– |
| | 30% ஆறுதல் தொகை | ரூ.9,02,280/– |
| | 12% கூடுதல் சந்தை மதிப்பு (ஒரு வருடத்திற்கு) | ரூ.3,60,912/– |
| | ஆக மொத்தம் | ரூ.42,70,792/– |

மேலும் இந்நேர்வில் குறிப்பிடப்படும் 638 சதுர அடி தனியார் நிலத்தினை கையகபடுத்த சென்னை மாநகராட்சி மன்றம் தீர்மானம் எண்.335/2008, நாள் 30.07.2008 ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது எனவும், கையகபடுத்தப்படும் இந்நிலங்கள் நகர்புற நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கவரப்படவில்லை எனவும் தெரிவித்து மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், நுங்கம்பாக்கம் கிராமம், பிளாக் எண்.24, புல எண்கள்.240/16, 240/17 மற்றும் 240/18 ல் 638 சதுர அடியில் வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையை அகலப்படுத்துவதற்காக தோராயமான நில மதிப்பு ரூ.42,70,792/– (ரூபாய் நாற்பத்து இரண்டு இலட்சத்து ஏழுபதாயிரத்து ஏழுநூற்று தொண்னூற்றி இரண்டு மட்டும்) செலவில் தனியார் நிலங்களை கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை வருவாய், நிதித் துறை ஆகியவற்றின் இசைவுடன் அவற்றின் அ.சா.கு.எண்.24630/நிநி2/10–1, நாள் 07.06.2010 மற்றும் 31906/ந.நி.ம.கு.வ/10, நாள் 18.06.2010 ன் படி வெளியிடப்படுகிறது.

**/ ஆளுநரின் ஆணைப்படி /**

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை – 1
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3

<u>நகல்:</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு வருவாய் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
வருவாய் (நி.மு.4/நி.நி.2) துறை, சென்னை – 9
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்**